மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். நான் இப்பொழுதுதான் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தேன். அதிலே ஒருவருக்கொருவர் கேள்வி பதிலாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றபடி ஒன்றும் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல அதை எக்ஸ்பஞ்ச் செய்யாமல் விட்டு விடலாம் என்று நினைக்கிறேன். காரணம் எக்ஸ்பஞ்ச் செய்தால் இதிலே இரண்டு பக்கங்களை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவருக் கொருவர் பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லி விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களும், அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியதில்லை என்று தெரிவித்தார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டாம் என்பதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரொம்ப நல்லது. அது அப்படியே இருக்க வேண்டுமென்று உத்திரவிடுகிறேன். பத்திரிகைகளுக்கு குறிப்பிடப்பட்டிருந்த தடையை நீக்குகிறேன். பத்திரிகைகள் தாராளமாகப் பிரசுரிக்கலாம்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ் நாடு காவல் துறை மானியம் குறித்து காலையிலிருந்து அனைத்துக் கட்சி களுடைய தலைவர்களும் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் களும் பல கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இன்று ஒருவரைவிட ஒருவர் வேகமாகப் பேச வேண்டும் என்பதிலே நல்ல போட்டி இருந்தது என்பதை நான் காலையிலிருந்து கூர்ந்து கவனித்து வருகின்றேன். அந்தப் போட்டியிலே யார் வென்றார்கள் என் பதை என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அவர்கள் போட்டுக் கொண்ட போட்டியிலே யாருடைய போர்க் கருவி கூர்மையானது என்பதைச் சோதித்துப் பார்க்க என்னைத்தான் பயன்படுத்திக் கொண்டார்கள் என் பதை மாத்திரம் நான் மறந்து விடவில்லை. இறுதியிலே எனக்குப் பெரு மகிழ்ச்சி என்னவென்றால் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் எழுதி காங்கிரஸ் அமைச்சர் களால் தடைசெய்யப்பட்ட உதய சூரியன் என்ற நாடகத்திலே வருகின்ற தாலாட்டுப் பாட்டை அவரே பாடவேண்டிய ஒரு நிலைமைக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டேனே என்பதிலே எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி. நான் அந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று முன்னாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களை இந்த மன்றத்திலே கேட்டு, இந்தப் பாடல் தடை செய்யப்பட வேண்டுமா என்று கேட்டு அதை இந்த மன்றத்திலே நான் படித்துக் காட்டினேன். பாடிக்காட்டவில்லை. பாடியிருந்தால் இந்த மன்றம் உடனடியாகக் கலைந்துவிடும், எனவே நான் பாடிக் காட்டவில்லை. படித்துக் காட்டினேன். ஆனால் அவர்கள் என்னுடைய பேச்சுக்கு ஒரு நல்ல தொடக்கத்தை எடுத்துக் கொடுத்தார்கள் என்பதிலே நான் பெருமையடைகிறேன். ஏனெனில் எதிர்க்கட்சி வரிசை யிலே இருந்த நேரத்திலேயும் போலீஸாருடைய துன்ப துயரங்களில்

எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிறைந்த அக்கறை இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அவர்கள் இங்கு படித்துக் காட்டிய பாடல் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

இன்று இங்கு பேசிய பலருடைய பேச்சில் ஒருவர் இருவர் தவிர, பரிதாபத்திற்குரிய காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களைப்பற்றி அவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி அவர்களுக்கு இன்னும் மேலும் என்ன என்ன வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதுபற்றி அதிகமாகப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஓரிருவர் பேசிய பேச்சிலேயும் மிகப் பெரிய இடத்தை அதற்காக அவர்கள் யாரும் தரவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நான் என்ன சொன்னேன்? நிலவிலே களங்கம் இருப்பதைப்போல இந்தத் துறையிலேயும் சில பேர்கள் இருக்கிறார்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதையும் இன்று சுட்டிக்காட்டினார்கள். முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட பிறகும் அதே விதமான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் தூய்மையானவர்கள், இந்தத் துறையை கட்டிக் காக்கின்றவர்கள், இந்தத் துறையிலே பரந்து கிடக்கின்ற பல்லாயிரக்கணக்கான காவலர்கள், அவர்களுடைய துணை அதிகாரிகள் அனைவருமே தூய்மையானவர்கள் என்று நான் எடுத்துக் கொண்டு இங்கு எடுத்துவைக்கப்பட்ட விவாதங்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரிடத்தில் நாம் வெறுப்பு அடைகிற அளவிற்கு சில தவருன எண்ணங்கள், தவருன செயல்கள் நிச்சயமாக இருக்கக் கூடும். அவைகளையெல்லாம் இது போன்ற மாமன்றங்களில் விவாதிக்கப்படுகிற நேரத்திலே, எடுத்து விளக்கப்படுகிற கருத்துக்களின் மூலமாக அவர்களே திருத்திக் கொள்வதற்கும் வழி ஏற்படும் என்ற வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சூடாகத் தங்களுடைய உரைகளை ஆற்றியிருந்தாலும் கூட சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரியவர்கள் நிச்சயமாக சிந்தித்துப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

தாலாட்டுப் பாடலிலே போலீஸாருடைய வீட்டிலேயிருக்கின்ற கஷ்டங்களை ஆராரோ பாடுகின்ற அம்மையின் வாயிலாக நான் விளக்கி இருந்தேன். அந்தப் பாட்டோடு நின்று விடாமல் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு, அதிலும் குறிப்பாக 1969-ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, அந்தப் பாட்டை நினைவில் வைத்துக் கொண்டு போலீஸாருக்கு உடனடியாக சில வசதிகளை, வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்பதற்காக போலீஸ் குழு ஒன்றை, காவல் துறை ஆணைக் குழு ஒன்றை அமைத்தேன். திரு. ஆர். ஏ. கோபாலசுவாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களும், திரு. கோவிந்தசுவாமிநாதன் அவர்களும், திரு. சந்திரசேகரன் அவர்களும், திரு. என். கிருஷ்ணசாமி அவர்களும் உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை 2—1—1971-இல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலே 133 பரிந்துரைகள் சொல்லப்பட்டன. அந்தப் பரிந்துரையிலே 122 பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி

ஏற்றுக் கொண்ட 122 பரிந்துரைகளில் மிக முக்கியமான 15 பரிந்துரைகள் அமுல் நடத்தப்பட்டுவிட்டன என்பதையும், 27 பரிந்துரைகள் இப்போது அமுல் நடத்தப்படுகிற கட்டத்திலே ஒன்றன்பின் ஒன்றாக செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

அமுல் நடத்தப்பட்ட அந்த 15 பரிந்துரைகள் ஊதிய விகிதம், பஞ்சப்படியை மாற்றியமைத்தல் ஆகியன. அவர்கள் பாடிக் காட்டினார்கள் 'துப்பாக்கி எடுத்துக்கிட்டுப் போகின்ற உங்க அப்பனிடம் பழம் பாக்கி கேட்டு வருகிறார் கடன்காரர்' என்று சொன்னார்கள். ஏன் அப்படிக் கேட்டு வந்தார்கள் தெரியுமா? அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 1970-ஆம் ஆண்டு வரையிலே 70 ரூபாயாக இருந்தது. ஆகவே துப்பாக்கிக்கு முன் பழம்பாக்கிக்காரன் வந்து நின்று கொண்டிருந்தான். இந்த 70 ரூபாய், போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்குப் பிறகு 150 ரூபாயாக அவர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. (பலத்த கைதட்டல்) முதல் நிலைக் காவலர்களுக்கு 200 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 70 ரூபாய் சம்பளத்திலிருந்த காவல் துறை நண்பனுக்கு இன்றைக்கு 150 ரூபாய் சம்பளம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தி அளித்திருப்பது, பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, அந்தப் பாட்டின் கருத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் இருந்த காரணத்தினால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன்.

தலைமைக் காவலர்கள் 90 ரூபாய் ஊதியம் பெற்று வந்தார்கள். இப்போது 210 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள். காவலர்களும், தலைமைக் காவலர்களும் குறைந்தபட்சம் 25 ரூபாய் இப்போது ஊதிய உயர்வு பெற்று வருகின்றார்கள்.

அடுத்தபடியாக, காவல் துறையிலே உள்ள பதவிகளை மற்ற இலாகாவிலே உள்ள இது போன்ற பதவிகளோடு ஒப்பிட்டு ஊதிய நிர்ணயம் செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காவல் துறை ஆணைக்குழுவின் சிபாரிசின்படி சிறப்பு ஊதியங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளன. வீட்டு வாடகைப்படி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் பெரு நகர்ப்பகுதிகளில் பணியாற்றுகின்ற இரண்டாந்தர காவலர்களுக்கு 1—10—1970-க்கு முன்னால் 7 ரூபாய் வாடகைப்படியாகத் தரப்பட்டது. 1972-73-இல் இந்த வாடகைப்படி 25 ரூபாயாகவும் 1973-74-இல் 30 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற அதிகாரிகளுக்கும் இதுபோன்று வாடகைப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. பெரு நகர் அல்லாத மற்ற ஊர்களில் உள்ள காவலர்களுக்கு வாடகைப்படி 7 ரூபாயிலிருந்து 1972-73இல் 20 ரூபாயாகவும் 1973-74-இல் 25 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, வண்டி வாகனப் படி சீரமைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்கு 1—10—70-க்கு முன் 4 ரூபாய் பெற்று வந்த காவலர்கள் இப்போது இந்த வண்டி வாகனச் சீரமைப்புப் படி 5 ரூபாய் பெறுகிறார்கள். 31 ரூபாய் பெற்று வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் வண்டி வாகனப்படியாக இப்போது 40 ரூபாய் பெறுகின்ற நிலைமையைப் பெற்று உள்ளார்கள். 1—6—66-ல் குறைந்த பட்ச ஊதியம் 70 ரூபாயாக இருந்தபோது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பயிற்சிக்குச் சேரும்போது அவருக்குத் தரப்பட்ட ஊதியம் 60 ரூபாயாக இருந்தது. 1—6—1966-ல் நேரடியாகப் பயிற்சிக்கு ஒருவர் வந்து இணைவாரானால் அவருக்கு 60 ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது காவலர்களுடைய சம்பளம் குறைந்தபட்சம் 150 ரூபாயாக ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் 146 ரூபாயாக ஆக்கப் பட்டிருக்கிறது.

காவல் படை சேம நல நிதி என்பது ஈட்டுத் தொகையாக அரசு சார்பில் வழங்கப்பட்டதை மாற்றி 1971-ல் சேம நல நிதிக்கு அரசின் சார்பில் 1 இலட்ச ரூபாயும் 1972-ம் ஆண்டு 1½ இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்வேன். இதனால் 1967-ம் ஆண்டு இந்த சேம நல நிதியின் சார்பாக நிதியுதவி பெற்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 182 ஆக இருந்ததற்கு மாறாக 1972-ல் 512 ஆக உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள முடியும்.

காவலர்களுக்கும், படைகலன் தாங்கிய காவலர்களுக்கும் (எஸ்.ஏ.பி.) இடையே இருந்த ஈட்டு விடுப்பு ஊதியத்திலிருந்த மாறுபாடுகள் களையப் பட்டு விட்டன. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் (D. I. G. services and Co-ordination) டி.ஐ.ஜி. பணிகள் என்ற பதவி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

குற்றங்கள், குற்றவாளிகள் பற்றிய விவரங்கள், இவைகளை இயந்திரங் களின் மூலம், கம்ப்யூட்டர் மூலம், கணக்கெடுக்கும் முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, இந்தப் பரிந்துரை அடிப்படையில். இதன் மூலம் பழைய குற்றவாளிகள் கைரேகை, அங்க அடையாளங்கள், குற்ற விவரங் கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு பிரிதோர் குற்றம் நடக்கிற நேரத்தில் பழைய விவரங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்த இயந்திரம் பெரிதும் பயன்படுகிறது. இதன்படி 1963 முதல் 1973-ஆம் ஆண்டுவரை நடைபெற்றுள்ள 5 இலட்சம் குற்றங்களையும், 3 இலட்சம் குற்றவாளிகள் பற்றிய விவரங்களையும் 73 ஜூலைக்குள் கணக்கீடு செய்து வைக்கப்படும். இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறையில்தான் இந்த முறையை முதன் முதலாக மேற்கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள முடியும். இந்தப் பரிந்துரைகளும், இதன் தொடர் பான ஏனைய பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட ஒரு கோடியே அறுபத் தெட்டு இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேலும் இப்போது அமல் நடத்தப்படுகிற 27 பரிந்துரைகளுக்கான விவரங்களை நான் சொல்லியாக வேண்டும்.

அவர்கள் தாலாட்டுப் பாட்டுப் பாடியதற்காக இவைகளை நான் விவர மாகச் சொல்லவேண்டியிருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், காவலர், முதல் நிலை, இரண்டாம் நிலை, ஆகியோருக்குப் பயிற்சிக் காலத்தை மாற்றி புதிய திட்டப்படி பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினரில் 80 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி அளிக்க முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சை, கோவை காவல் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காவல் வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. புலனாய்வு, நீதிமன்றப் பணி, ரோந்து வருதல் போன்ற முக்கியப் பணிகளுக்கு முதல் நிலைக் காவலர்கள் என்ற (First Grade Constables) புதிய பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளதில் 3 ஆயிரம் பேர் முதல் நிலைக் காவலர்களாகப் பயன் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கண்ட்ரோல் ரூம் ஏற்படுத்துவதற்கான முயற்சி, ஒவ்வொரு மாவட்டத்திலும் கைவிரல் ரேகைப் பிரிவு, நிழல் படப் பிரிவு ஏற்படுத்துதல், காவல் வானொலிப் பிரிவில் உள்ள அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், கணக்கிடு நிலையத்தில் அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், சம்பளப் பட்டியல் தயாரிக்க பிராட்மா (Bradma) முறையைக் கொண்டு வருதல், வாகன வண்டிகளை எழாண்டுகளில் அதிகரித்தல், காவல் நிலையங்களை மாவட்டத் தலைமை நகரங்களோடும் மாநிலத் தலைமையிடத்தோடும் இணைப்பதற்கு ரேடியோ சாதனங்கள், டெலிபிரிண்டர்கள், உருவ நிழல் ஊடனுப்பி ஆகியவைகளை அமைத்தல்—இவையும் இவைபோன்ற மொத்தம் 27 பரிந்துரைகளும் நிறைவேற்ற 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இரவு 8-00 அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள 122 பரிந்துரைகளை அமல் நடத்தினால் தொடராச் செலவு 6 கோடியே 10 இலட்சமும், ஆண்டுதோறும் ஆகிற செலவு 2 கோடியே 81 இலட்சமும் அதிகமாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1967-ல் 34,964 காவல் துறை ஆட்படையின் எண்ணிக்கையாக இருந்தது. 1972-73-ல் 43,364 ஆக அது உயர்ந்துள்ளது. இன்னும் ஐந்தாண்டுகளில் இந்த விகிதாசாரத்தில் அது 46,000 ஆக அதிகரிக்கக் கூடும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

குற்றப் புலனாய்வுகளைக் கவனிக்க சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் இடையே துணை இன்ஸ்பெக்டர் (டெபுடி இன்ஸ்பெக்டர்) என்ற புதிய பதவியும் விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

இன்று காலையில் பேசிய உறுப்பினர்களில் சிலர் இவர்களுக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் இவை எல்லாம் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசினார்கள். 1970-ல் சட்டப் பேரவையிலே கிராமப்புறக் காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று நான் அறிவித்ததற்கு ஏற்ப 1971-ல் 100 மோட்டார் சைக்கிள்களும், 1972-73-ல் 43 மோட்டார் சைக்கிள்களும், 1973-74-ல் 100 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படும் என்ற நிலைமையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். 143 மோட்டார் சைக்கிள்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டாகிவிட்டன.

[1973 மார்ச் 23 [டாக்டர் மு. கருணாநிதி]

அதே போல் கிராமப்புறக் காவல் நிலையங்களுக்கு சைக்கிள்கள் வாங்கக் கடன் தொகை—உதவித் தொகை (Loan-cum-subsidy scheme) என்ற அடிப்படையில் 5,000 சைக்கிள்கள் வாங்க அனுமதிக்கப்பட்டு இது வரை 2,390 சைக்கிள்கள் வாங்கிக் காவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்வேன்.

மாநிலத்திலுள்ள 251 காவல் வட்டங்களில் 200 வட்டங்களுக்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 1970-ல் 88 வாகனங்கள் இருந்தன. 1971-ல் 44 வாகனங்களும், 1972-ல் 68 வாகனங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திலுள்ள 820 காவல் நிலையங்களில் இதுவரை 450 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 1972–73-ல் 166 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வைக்க 10—1—73 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 120 காவல் நிலையங்களுக்குக் கம்பி யில்லாத் தந்தி இணைப்புக் கொடுக்க 24—12—71-ல் உத்தரவு தரப்பட்டு இணைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. 1972–73-ல் 270 காவல் நிலையங் கள் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்பட்டுச் செயல்பட விரைவில் உத்தரவு வழங்கப்படும்.

காவல்துறை அதிகாரிகளை எல்லாம், திறமையாகப் பணி யாற்றியவர்களை எல்லாம் நாம் பாராட்ட வேண்டும்—கவுரவிக்க வேண்டும் என்ற கருத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்க மணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் வீரச் செயல் புரிந்தவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பல ஆண்டுக் காலமாக நற்பணியாற்றியவர்களுக்குத் தமிழக அரசின் புதிய திட்டமாக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பொற்கிழி அளித்தல், பொற் பதக்கம் வழங்குதல் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்து ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாள் முதலமைச்சர் பதக்கம், அந்த விருது பெறுகிறவர்களுக்கு விழா நடத்தி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகிறது.

வீரச் செயலுக்கான தங்கப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் தரப் பட்டிருக்கிறது.

கடமையுணர்வோடு பணியாற்றியமைக்காக காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் ரூபாய் ஆயிரமும், பதக்கமும் தரப்படுகிறது. சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் இரண்டாயிர மும் வழங்கப்பட்டிருக்கிறது. டி.எஸ்.பி. நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் வழங்கப்படுகிறது. இவர்களில் தீயணைப்புப் படையினரும் சேருகிறார்கள்.

1969-ல் வீரச் செயலுக்கான பதக்கம் இரண்டும், தலைசிறந்த பணிக் கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன.

1970-ல் வீரச் செயலுக்கான பதக்கம் நான்கும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன. 1971-ல் வீரச் செயலுக்கான

பதக்கம் ஐந்தும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபத்து மூன்றும், வழங்கப்பட்டிருக்கின்றன. 1972-ல் வீரச் செயலுக்கான பதக்கம் மூன்றும் தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபத்திரண்டும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பதக்கம் அளிக்கும் விழா சென்னையிலேயே தொடர்ந்து நடைபெறுவது என்று இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலை நகரிலும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்பு மிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இங்கு அவர்களுடைய கட்டாய விடுப்பு ஊதியம் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று சிலர் பேசினார்கள். ஏற்கெனவே காவல் துறையினருக்கும் தலைமைக் காவலருக்கும் வாரத்தில் ஒரு நாள் கட்டாய விடுப்பு—அளிக்க வேண்டுமென்றும், ஆனால் அந்த நாளில் ஏதோ பொதுப்பணியின் காரணமாக அவசரத் தேவையின் காரணமாக அவர்கள் அந்த விடுப்பினை எடுத்துக்கொள்ள முடியாமல்—அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படாமல்—பணியாற்ற அழைக்கப்படுவார்களானால், அந்த ஒரு நாளைக்கு அவர்களுக்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது அந்த ஊதியம் இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டு இரண்டு நாட்களுக்குமுன் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் அதிகச் செலவு சுமார் ரூ. 2½ இலட்சமாகும். இதனால் ஏறத்தாழ 10,000 காவலர்கள் பயனடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணி புரிகிற நேரத்தில்—நண்பர் வகாப் அவர்கள் காலையிலே பேசும் போது எடுத்துக் காட்டியதுபோல், பல காவலர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள், அங்கஹீனர்களாக ஆகிறார்கள், உயிரிழப்புக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களை நிர்க்கதியாக விட்டு விடாமல் அந்தக் காவலர்களுடைய குடும்பங்களை ஓரளவுக்கு மனிதாபிமான உணர்ச்சியோடு நோக்குகின்ற பொறுப்பினையும் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 1969-ம் ஆண்டு சனவரி 21-ம் நாள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பரமத்தி என்ற ஊரின் காவலர் மாரிமுத்து என்பவர் ஒரு முரடனைப் பிடிக்கப் போகும்போது குத்திக் கொல்லப்பட்டார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பதக்கமும், 3,000 ரூபாயும் அண்ணா பிறந்த நாள் அன்று வழங்கப்பட்டது. அது தவிர சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

4—1—69 அன்று ஒரு குற்றவாளியைப் பிடிக்கும்போது ஏற்பட்ட மோதலில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காவலர் ராமசாமி கத்தியால் குத்தப்பட்டு இறந்தார். அவருடைய மனைவிக்கு 1970-ல் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நம்முடைய சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5—10—70-ல் குற்றவாளியைக் பிடிக்கச் சென்றபோது குத்துண்டு இறந்த வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பழனிசாமி என்பவரின் மனைவிக்குக் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் தரப்பட்டது.

சிறப்பு ஆயுதப் படையைச் சேர்ந்த துளசிமணி என்பவர் அஸ்ஸாம் மாநிலத்தில் எல்லை காக்கச் சென்று அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்தார். அவருடைய குடும்பத்திற்கு நமது சேம நல நிதியிலிருந்து **2,000** ரூபாய் வழங்கப்பட்டது.

**5—2—1972**-ல் விவசாயப் போராட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ராமசாமி எதிர்பாராத விதமாக மரணம் அடைந்ததால் அவருடைய குடும்பத்திற்கு சேமநல நிதியிலிருந்து **4,000** ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும் **5,000** ரூபாய் வழங்கப்பட்டது.

**22—11—1972**-ல் திருநெல்வேலியில் தலைமைக் காவலர் சங்கர பாண்டியன் என்பவர் வன்முறைக் கூட்டத்தால் தாக்கப்பட்டு எதிர்பாராத விதமாகத் துப்பாக்கிக் குண்டிற்குப் பலியாகி மரணமடைந்தார். அவருடைய குடும்பத்திற்கு சேம நல நிதியிலிருந்து **4,000** ரூபாய் வழங்கப்பட்டது.

ஒரு சோகச் சம்பவம் : **26—1—1970** அன்று குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட ஹவில்தார், சங்கரபாண்டியன் கொஞ்சதூரம் நடந்து சென்றபோது நெஞ்சுவலி ஏற்பட்டது. ஆனாலும் கடமையிலிருந்து தவறக் கூடாது என்பதற்காக அவருடைய நெஞ்சுவலியைத் தாங்கிக்கொண்டு அணிவகுப்பு முழுவதையும் முடித்துக்கொண்டுதான் நோயைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று மிகுந்த சிரமத்திற்கிடையே நடந்து சென்று அணிவகுப்பு முடிந்த இடத்திலேயே சுருண்டு வீழ்ந்து மாரடைப்பால் இறந்து போனார். அவருடைய குடும்பத்திற்கு சேம நல நிதியிலிருந்து **1,500** ரூபாயும், முதலமைச்சர் நிதியிலிருந்து **3,000** ரூபாயும் வழங்கப்பட்டது.

நான் இவற்றை எல்லாம் சொல்லக் காரணம் காவலர்களும், காவல் துறை அதிகாரிகளும் நம்மவர்கள்தான். வேறு ஒரு மாற்று உடையை, ஒரு காக்கி உடையை, நம்மிலே இருந்து வேறுபட்ட உடையை அணிந்து கொண்டிருக்கும் காரணத்தாலேயே நம்முடைய வெறுப்புக்கு ஆளாகின்ற சில உருவங்கள் என்ற அளவில் அவர்களை எண்ணிடக் கூடாது ; அவர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்தச் சமுதாயம் வளர, இந்தச் சமுதாயம் நல்ல ஒளி பெற, இந்தச் சமுதாயத்தில் குற்றங்கள் குறைந்து நல்ல தூய்மை ஏற்பட அனைவரும் சேர்ந்து ஆற்றுகின்ற பணியில் காவலர்களுடைய பணியும் இணைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் மனிதாபிமான உணர்ச்சியோடு இந்த அரசு அவர்களுடைய நல்வாழ்வில் நிறைந்த அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன்.

ஆராரோ பாடியதோடு நிற்கவில்லை ; யார் யாரோ செய்யாததை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செய்துகாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்தக் குறிப்புகளை எல்லாம் நான் தந்தேன்.

அவர்கள் எவ்வளவு அளப்பரிய பணிகளை எல்லாம், தீரச் செயல்களை எல்லாம் ஆற்றி வருகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்களேகூட, உறுப்பினர்களேகூடச் சொன்னார்கள். எந்த எதிர்க்கட்சியின் தலைவ ராவது இந்தத் துறை அல்லது இந்தத் துறையினுடைய நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களா என்று உற்றுக்கவனித் தேன். யாரும் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே பேசினாலும் சரி, அம்மையார் அனந்தநாயகி பேசினாலும் சரி, நண்பர் மதி பேசினாலும், திரு. பொன்னப்ப நாடார் பேசினாலும் சரி, திரு. கே. டி. கே. தங்கமணி பேசினாலும்சரி, கட்சியில் உள்ளவர்கள் யார் பேசினாலும்சரி, இந்தத் துறையைச் சிலாகித்தே பேசினார்கள். காரணம் அவரவர்களுக்குள்ள ஆசை.

நாம் விரைவிலே ஆட்சிப்பீடத்திற்கு வந்துவிடக் கூடும், ஆகவே இப்போதே அவர்களைப் பாராட்டி வைத்துக்கொள்ளவேண்டுமென்று அந்த ஆசை அவர்கள் உள்ளத்தில் இழையோடுவதை அது காட்டியது. இதை யெல்லாம் நீங்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். (ஆர வாரம்) சீரியஸாக என்றால் ஆட்சிக்கு வந்துவிடுவோமோ என்று சீரிய ஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொன்னேன்.

நான் இந்த ஆய்வுரையில் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். தர்ம புரி மாவட்டத்தில் ஒருவர் அரசாங்க அதிகாரிபோல் நடித்துப் பயங்கரமான மோசடியில் ஈடுபட்டதைக் காவல்துறையினர் கண்டுபிடித்து இருப்பது சாதா ரண விவகாரம் அல்ல.

அதைப்போல் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவர் இரவு நேரங்களில் சென்னை நகரத்தில் ஜன்னல் வழியாக கைகளை நுழைத்தும், யாருமில்லாத நேரங்களில் உள்ளே நுழைந்தும் அவர் கிட்டத்தட்ட 203 குற்றங்களில் ஈடுபட்டவர், அவர் பிடிப்பட்டார். அவரிட மிருந்து ரூ. 85,000 மதிப்புமிக்க விலை உயர்ந்த தங்க நகைகள், வைர நகைகள், கடிகாரங்கள், டிரான்ஸிஸ்டர்ஸ், சைக்கிள்கள் முதலியன கைப்பற்றப்பட்டு அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

ராகவேந்திர ராவ் என்பவர் திருமணக் கூட்டத்தில் தானும் ஒருவர் போல், ஒரு விருந்தினர்போல் வருவார். இப்போதுகூட நாம் ஒருவருக்கு கல்யாண அழைப்பிதழ் அனுப்பினால் அது அவருக்குப் போய் சேருவதில்லை. வேறு யாரோ வாங்கிக்கொள்கிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டு அவர் விருந்துக்கு வருவார். நாம் அவருக்கு அழைப் பிதழ் அனுப்பியிருப்போம் என்று எண்ணிக்கொண்டு நாம் அவரை வரவேற்போம். மணமகன் வீட்டில் உள்ளவர்கள் அவர் மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக் கொள்வார்கள். மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் அவர் மணமகன் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக்கொண்டு வரவேற்பார்கள். அப்படி விருந்தாளிபோல் இந்த ராகவேந்திர ராவ் திருமண வீடுகளில் விருந்தினர்போல் நுழைந்து நடத்திய திருட்டுகளில் ரூ. 20,000 மதிப்புள்ள நகைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டிருக்கிறன்றன. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

1973 மார்ச் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

1971 டிசம்பரில் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள் வில்லிவாக்கத்தில் வந்து தங்கினார்கள். அவர்கள் ஆனந்த ராவ் என்பவர் தலைமையில் புகைவண்டிகளில் கொள்ளை நடத்தினார்கள், வழிப்பறிக் கொள்ளைகள் நடத்தினார்கள். இவர்களும் காவல் துறையினருடைய திறமையினால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்கற்பட்டிலும், சென்னையிலும் கன்னக்களவுகளில் ஈடுபட்ட டெல்லிப் பட்டணத்தைச் சேர்ந்த பவேரியா, ஜான்வலி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதும் ஓர் சாதாரண விவகாரம் அல்ல.

ஆந்திராவைச் சேர்ந்த கள்ள நோட்டு அச்சடிக்கும் கூட்டம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. 1970-ம் ஆண்டு நவம்பர் முதல் 1972 நவம்பர் வரையில்—எதிர்க் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்களே அந்தப் பயங்கரப் படுகொலைகள், 7 படுகொலைகள், 4 திருட்டுக்கள் நடத்திய எட்டுக் கொடியவர்களை நம் போலீஸ் இலாகா கைது செய்தது பாராட்டுக்குரிய அம்சமாகும். அவர்களை நான் தனிப்பட்ட முறையில் பாராட்டியிருக்கிறேன் என்றாலும் இந்த மாமன்றத்தின் சார்பில் அந்தக் காவல் துறை அதிகாரிகள் அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (ஆரவாரம்). அந்தக் கூட்டத்தினர் நடத்தியது கொலை மாத்திரமல்ல, களவும், ரூ. 5½ இலட்சம் வரையில் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் ரொக்கப்பணம் கொஞ்சமும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. புலனாய்வுத் துறை தொடர்ந்து தீவிரமாக தன்னுடைய விசாரணையை மேற்கொண்டிருக்கிறது.

குற்றங்கள், கடந்த காலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல் குறைந்து விடவில்லை என்றும் இது முதலமைச்சர் அவர்களுடைய திறமைக்கு ஒரு சான்று என்றும் நம் நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் 1971, 1972 இந்தஇரண்டு ஆண்டுகளுக்கும் இந்த ஆய்வுத்துறையில் இருப்பதைப் பார்த்து 71-ல் 25,830 குற்றங்கள், 72-ல் 26,080 குற்றங்கள் என்பதைச் சொல்லி உயர்ந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் இந்த ஆயிரம் உயர்வு அல்ல என்று சொல்லமாட்டேன். ஆனால் 1966-ல் 28,477-ல் இருந்து 1967-ல் 28,787ஆக இருந்து இப்போது 26,080 ஆகக் குறைந்திருக்கிறது. அது மேலும் குறைய வேண்டும்.

அதே நேரத்தில் இதிலே இருசார்புடைய கருத்துக்கள் இருக்கின்றன. குற்றங்கள் குறைந்திருப்பதுபற்றி ஆய்வுரையில் சொல்லும்போது நிறைய குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. நீங்கள் கண்டுபிடிக்காமல் விட்டு விட்டீர்களா என்ற கேள்வியும் எழலாம். அல்லது நிறையக் குற்றங்கள் நடக்கும் அளவிற்குக் காவல் துறை சரியாகப் பணியாற்றவில்லையா என்கிற கேள்வியும் எழலாம்.

ஆனால் இன்னும் குற்றங்கள் குறைவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்னும் நவீன வசதிகளையெல்லாம் காவல் துறைக்குச் செய்துகொடுக்க இந்த அரசு தக்க முயற்சிகளையெல்லாம் எடுத்து வருகிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விருன். ம்புகிறே

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கள்ள நோட்டு வழக்குச் சம்பந்தமாகக்கூட மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நாம் 1971-72-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அந்த வழக்குகள் எதுவும் அப்படியே நின்றுவிடவில்லை. மேலும் முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பூரில் நடந்த ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திருப்பூரில் கள்ள நோட்டு வழக்கு விசாரிப்பதற்காகத் தனிக் கோர்ட் நியமிக்கும்படி உயர்நீதிமன்றத்தைப் போலீஸ் துறையினர் கேட்டார்கள். தனிக் கோர்ட் ஒரு மாதத்திற்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே தான் இதுவரையில் அந்த விசாரணை எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது.

சேலம் 1970-ம் ஆண்டு கள்ள நோட்டு வழக்கு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. திருப்பூர் வழக்கோடு இந்த வழக்குத் தொடர்புடையது. அதுவும் விசாரணை நடைபெற்று வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட கள்ள நோட்டு வழக்குப்பற்றி நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது, 26—3—1973-ல் இந்த வழக்கு விசாரணைக்கு வர இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயப்பேட்டை கள்ள நோட்டு வழக்கு. இதில் நாற்பது குற்றவாளிகள் மொத்தம் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் 19 பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 21 பேர்கள் இருக்கிறார்கள். இதில் முக்கிய குற்றமாகிய அச்சடிக்கும் குற்றம் கேரளாவில் நடந்தது. ஆகவே நமது போலீஸார் இங்கேயே வழக்கு நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள், ஆனால் கேரளாவைச் சேர்ந்தவர்கள் இங்கு நடத்தக் கூடாது, கேரளாவில் வழக்கை நடத்தவேண்டுமென்று கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கி விட்டார்கள். இப்போதெல்லாம் ஒரு பழக்கம், நம் மாநிலத்தில் வழக்கு நடத்தக் கூடாது, வேறு மாநிலத்தில் நடத்த வேண்டும் அல்லது வேறு எங்கேயாவது நடத்த வேண்டும் என்பது. இதை இந்தக் கள்ளநோட்டுக்காரர்கள் எல்லாம் பின்பற்றி கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். பின்னர் நம் போலீஸ் வாதாடி அந்தத்தடையை ரத்து செய்தார்கள். கோர்ட்டிலிருந்து அதிகாரப்பூர்வமான நடவடிக்கைக் குறிப்புகள் வந்ததும் வழக்கை இங்கு தொடர்ந்து நடத்துவதற்கு இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

கோவை 'பி' ஸீரீஸ் டாலர் வழக்கு. இது கோவை கீழ்க் கோர்ட்டில் விசாரணை முடிந்தபின், செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பி இரண்டு வாரங்கள் ஆகின்றன. கோவை 'எல்' ஸீரீஸ் டாலர் வழக்கு கோவை நீதிமன்றத்தின் கீழ்க் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

திருவண்ணாமலை வழக்கு. இதில் நோட்டு அச்சடித்தவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள், எல்லாம் அங்கிருந்துதான்! மொத்தம் 11 குற்றவாளிகள். இதில் மூன்று பேர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள்.

இராயப்பேட்டை வழக்கைப்போலவே இதிலும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் வழக்கைத் தமிழ்நாட்டில் நடத்தக்கூடாது என்று ஸ்டே வாங்கினார்கள். தடையை விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவை எல்லாம் கிடப்பில் போட்டு விடப்படவில்லை. அதற்கான முயற்சிகளை எல்லாம் அந்த அந்த நீதிமன்றங்களில் எடுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதை நண்பர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

அதுமாத்திரமல்ல. இந்த வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடர நாம் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு ஒரு டி.எஸ்.பி. தலைமையில் மூன்று இன்ஸ்பெக்டர்கள், ஆறு சப்-இன்ஸ்பெக்டர்கள், நான்கு தலைமைக் காவலர்கள், ஆறுகாவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்றைக் குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதிலுள்ள பெரிய அதிகாரிகள் எல்லாம் இந்த நோட்டுக்களை எப்படி அச்சடிக்கிறார்கள், எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு நாசிக்குக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள அரசாங்க நாணய அச்சகத்திற்குச் சென்று இதுபற்றிய நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து அந்த பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள்.

அதாவது கண்டுபிடிக்கிற பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். இந்தப் பிரிவு நல்ல முறையில் பணியாற்றுவதனால் கள்ளநோட்டு அச்சிடுபவர்கள் தொகை வர வர நிச்சயமாகக் குறையும் என்ற நம்பிக்கையை நாமெல்லாம் பெறலாம்.

அதேபோல் சிலை திருட்டுக்கூட—மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் சொன்னார்கள்—பெரிய சிலை திருட்டு ஒன்று 1967-ஆம் ஆண்டுவாக்கில் என்று கருதுகிறேன், சிவபுரம், தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள சிலையை, திலகர் என்பவர், அவர் உறவினர்கள், அவர் தகப்பனார்,அங்குள்ள ஸ்தபதியார் எல்லோரும் சேர்ந்து 75 லட்சம் பெருமானமுள்ள அந்தச் சிலை அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு நம் ஐ.ஜி. அவர்கள் அகில உலக இன்டர்போலில் அதைப்பற்றி விவாதித்து அமெரிக்காவில் உள்ள அந்தச் சிலையைக்கொண்டு வருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களும் அதற்கான உதவிகளைச் செய்வதாகச் சொல்லி டி.ஐ.ஜி. அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று எந்தவகையில் வழக்குகள் போடலாம் என்பதைப்பற்றி அதற்கான முயற்சிகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். சிவில் வழக்காக இருந்தால் உடனடியாக கேஸ் போட்டுவிட முடியும். கிரிமினல் வழக்குப் போடுவதற்கு அங்கு குற்றஞ்சாட்டி நிரூபிக்கும் அளவிற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு நமக்குத் தேவையாக இருக்கிறது.

மிக முக்கியமாக இந்த மானியத்திலே பேசிய எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள், தலைவர்கள் பலர் துப்பாக்கிப் பிரயோகங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகங்களில் உள்ளபடியே நான், அப்போது எவ்வளவு நடந்தது, இப்போது எவ்வளவு நடக்கிறது, நேற்று எவ்வளவு, இன்றைக்கு எவ்வளவு என்ற கணக்குகளைக்காட்டி, அன்று

நடக்க வில்லையா என்று கேட்டு நான் பிரச்சினையைத் திசை திருப்ப விரும்ப வில்லை. ஆனாலும் அந்தக் கணக்கு விவரங்களையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ஏனென்றால், இதுவரையில் தமிழ்நாடு ஆட்சிப்பீடத்தில் உட்காராத டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கலாம். திரு. தங்கமணி கேட்பதில் நியாயம் இருக்கலாம். ஆளும் காங்கிரசில் இருக்கும் சிலபேர் கேட்பதில்கூட ஒரு நியாயம் இருக்கலாம்—(சிரிப்பு) ஆனால் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள்—இவ்வளவு துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கலாமா என்று கேட்கிற நேரத்தில் நாம் சிலவற்றை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. 1962–லிருந்து 66 வரை 5 ஆண்டுகளில் 60 துப்பாக்கிப்பிரயோகங்கள் நடை பெற்றன. இறந்தவர்கள் 64 பேர். 1967–லிருந்து 72 வரை ஆறாண்டுகளில் 46 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன. இறந்தவர்கள் 45 பேர். நான் அதைவிட இது குறைவு என்று வாதிட விரும்பவில்லை. ஆனால் இந்த அரசின் மனோ நிலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடை பெற்றிருக்கிற நேரத்திலெல்லாம் வேதனைக் கண்ணீர் வடித்து இருக்கிறது. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் துப்பாக்கி தானா என்று நண்பர் மதி அவர்கள் வேகமாகக் கேட்டார்கள். அவர்கள் மிக வேகமாகப் பேசினார்கள். எரிமலையின்மீது நின்றுகொண்டு நீரோ மன்னன் வீணை வாசிப்பதுபோல் நான் வாசிக்கிறேன் என்று எல்லாம் சொன்னார்கள். நான் சரித்திரத்தை மறந்துவிட்டேன். நீரோ மன்னன் எரிமலைமீது நின்று பிடில் வாசித்தானா அல்லது எழடுக்கு மாளிகையின்மீது நின்று கொண்டு பிடில் வாசித்தானா அந்த விவரமெல் லாம் எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

ஆனால் போராட்டங்கள் எந்த அடிப்படையில் தொடங்கப்படுகின்றன. டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் செத்து இருக்கிறார்கள். 12 பேர் செத்திருக்கிறார்கள். என்றால் சுட்ட வர்கள் போலீஸ்காரர்களாக இருந்தாலும் அதற்கு மறைமுகமாக இந்த கருணாநிதிதான், முதலமைச்சர் கருணாநிதிதான் காரணம் என்று குற்றம் சாட்டுவேன் என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு அழுத்தந்திருத்தமான வார்த்தைகள் போடாவிட்டால், இன்றைக்கு அவர் பேச்சுக்கு ஒரு நல்ல கிளைமாக்ஸ் கிடைத்திருக்காது. ஆகவே, அவ்வளவு அழுத்தந்திருத்தமாக வார்த்தைகள் போட்டுச் சொன்னார். (சிரிப்பு). நான் கேட்கிறேன் அதை அப்படியே மாற்றலாம். இந்தப் போராட்டத்திற்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் தூண்டிவிட்டவர் கள்தான். அந்த 10 பேர் செத்ததற்கும் இவர்கள் தான் மறைமுகமாகக் காரணமாக இருந்தார்கள் என்று நான் கூற முடியாதா? (கரவொலி). ஏனென்றால் போராட்டத்திற்கான கோரிக்கைகளை நாம் ஆராய வேண்டும்.

விவசாயப் போராட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். 1968–ல் நடை பெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை என்ன? எங்க ளுடைய நாட்டிற்கு இந்தி ஆதிக்கம் கூடாது. எங்கள் மொழிக்கு ஆபத்து வரக்கூடாது. தமிழைத் தாழ்த்திட இன்னொரு மொழிக்கு நாங் கள் இடந்தரமாட்டோம் என்று சூளுரைத்து இந்த நாட்டு இளைஞர் சமுதா யம், மாணவ சமுதாயம், கிளர்ந்தெழுந்தது. அவர்களுக்கு அனுசரணை யாகத் தமிழ் சமுதாயமே கிளர்ந்து எழுந்து நின்றது. 1965-ம் ஆண்டிலே

1973 மார்ச 23] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தி எதிர்ப்புப் புரட்சியே நடைபெற்றது. அப்போது ஒரு வார்த்தை மத்திய அரசு "இந்தியை நாங்கள் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம், உங்களுடைய எண்ணத்தை மதிக்கிறோம்" என்று சொல்லியிருந்தால் 53 பேர் அந்தப் போராட்டத்திலே பிணமாகத் தேவையில்லை. ஆனால் விவசாயப் போராட்டத்தின் நிலைமை என்ன? நாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளைச் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் விவசாய வருமான வரியை அதிகப்படுத்தியதற்கு ஆதரவு தெரிவித்து, அதை எங்களுடைய கட்சி ஆதரிக்கிறது என்றுகூறி, இங்கே அதற்கு வாக்களித்து நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாயப்போராட்டத்தின் பின்னால் நின்றது. ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து, பிரதமராக இருக்கின்ற மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள், என்ன சொன்னார்கள், இந்தப் போராட்டத்திற்கு வைக்கப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அவர்கள்சொன்னார்கள். ஏனென்றால், இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களிலும் இருக்கும் மின்சார டாரிப் ரேட் (**Tariff rate**) என்ன? நம்முடைய மாநிலத்திலுள்ள மின்சார டாரிப் ரேட்என்ன? அதையும் நாம்குறைப்பதாக ஒப்புக்கொண்டபிறகும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட பிறகும் இங்கே போராட்டம் நடத்தினார்கள். பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக்கொள்ளலாம். 12 கோரிக்கைகளா, அதில் 10 கோரிக்கைகளைப்பற்றி இப்போது பேசலாம் என்கிற அளவுக்கு இறங்கிவந்த பிறகும் இங்கே போராட்டம் நடைபெற்றது. ஆனால் ஒரு வரியில் மொழிப்போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். ஒரு வார்த்தையில் அந்த மொழிப்போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். இது அப்படி அல்ல.

இந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் விவசாயிகள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான நேரத்தில் மதுரை மாநாட்டில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பேசினார். அதைத்தான் திண்டிவனம் உறுப்பினர் ராஜாராம்கூட ஞாபகப்படுத்தினார். எம்.ஜி.ஆர். சொன்னார் "சில இடங்களில் அராஜகம் நடைபெறுகிறது என்றால் அதை அடக்கும் பொறுப்பு போலீசாருடையது. போலீஸ் ஏன் சுட்டது? சுட்டது சரியா? என்று கேட்கிறார்கள். போலீசார் மக்களை வன்முறையாளர்களிடமிருந்து காப்பாற்றவும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் சுடவேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்" என்று ஆகஸ்ட் 6-ம் தேதிதான் நம்முடைய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரை மாநாட்டில் பேசினார்கள்.

அது மாத்ரமல்ல. இன்று நம்முடைய திரு. கே.டி.கே.தங்கமணி அவர்கள்பேச்சிலே கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி இரண்டுமுறை சொன்னால் அ.தி.மு.க.வைப்பற்றி 20 முறை சொல்கிறார். அந்த அளவுக்கு அவர்கள் அந்தக் கட்சியின்மீது பற்றும், பாசமும் கொண்டிருக்கிறார்கள். நான் அதிலே குறுக்கிடுவதற்கு எந்த உரிமையும் பெற்றவன் அல்ல. ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த மாநாட்டிலேயே மேலும் பேசினார். நான் இந்தப் பேச்சைப்பார்க்கும்போது அந்தப் பேச்சையும் பார்க்க வேண்டியவன். மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள். "கம்யூனிஸ்ட்கள் இருக்கிறார்களே அவர்கள் நாட்டில் கலவரம் நடந்தால் முன்னுக்கு வருவது இல்லை. ஏனென்றால், பின்னால் இருந்து கலவரங்களைத் தூண்டிவிட்டு விஷமங்களைச் செய்வார்கள். அவர்கள் விஷமத்தனங்களுக்கு அப்பாவிகள் இரையாவார்கள்". ஆகஸ்ட் 6-ம் தேதி என்னு

டைய அருமை நண்பர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே மதுரை மாநாட்டில் எடுத்துக்கூறினார்கள். இந்த ப்பேச்சில்தான் விவசாய ப்போராட்டத்தைப்பற்றியும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். குறிப்பிடும்பொழுது இவைகளை அங்கே எடுத்துச் சொன்னார்.

கொலைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அரசியல் கொலைகள் கிட்டத்திட்ட 1970-லிருந்து 1972 வரையில் ஒரு கணக்கு எடுத்தால் நாங்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தபிறகும்கூட 1970-ல் நடந்தஅரசியல் கொலைகள் மொத்தம் 7. அதிலே கொல்லப்பட்டவர்கள் தி.மு.க. 2, காங்கிரஸ் 2, மற்றவர்கள் 3. அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டவர்கள்—1971-ல், அரசியல் கொலைகள் 9. கொல்லப்பட்டவர்களில் தி.மு.கவைச் சார்ந்தவர்கள் ர, காங்கிரஸ் 4. 1972-ல் அரசியல் கொலைகள் 5, கொல்லப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் 3, பி.எஸ்.பி. 1, காங்கிரஸ் 1. வேறு ஏதோ மணி மற்றவர்களைப் பற்றிச் சொன்னார்கள்.

காலையில் அம்மையார் அவர்கள் கருப்பையா, ஆறுமுகம் பற்றிச்சொன்னார்கள். அவர்கள் போலீஸ் கஸ்டடியில் (custody) இறந்துவிடவில்லை. 14-ம் தேதி கைது செய்யப்பட்ட கருப்பையா உடல் நோய் காரணமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, 17-ம் தேதி மரணம் அடைந்தார். அதேபோல், ஆறுமுகம் கைது செய்யப்பட்டு, மார்வலியின் காரணமாக பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அந்த நோயின் காரணமாக இறந்தார் என்றுதான் எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

நான் தமிழகத்தில் இந்த 3 ஆண்டுகளில் 1970–72 வரை நடைபெற்றுள்ள அரசியல் கொலைகளைப் பற்றிச் சொன்னேன். அதே நேரத்தில் கேரள போலீஸ் அமைச்சர் அங்கே சட்டசபையில் கொடுத்த தகவல்படி, 1970 முதல் 1972 வரை கேரளாவில் 53 அரசியல் கொலைகள் நடைபெற்று இருக்கின்றன. அதிலே கொல்லப்பட்டவர்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 17 பேர், காங்கிரஸ் 12 பேர், கேரள காங்கிரஸ் 5, சி.பி.ஐ. 4, முஸ்லீம் லீக் 3, ஆர்.எஸ்.பி. 2, ஆர்.எஸ்.எஸ். 1, இதரர்கள் 7. இது "இந்து" பத்திரிகையில் 21—10—1972 அன்று வந்திருக்கிறது. கேரள போலீஸ் அமைச்சர் சட்டசபையில் கொடுத்த தகவல் என்று செய்தியும் வந்திருக்கிறது. ஏதோ பொய் வழக்குப் போடுகிறோம். முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு ஏதாவது இடஞ்சல் என்றால்......

டாக்டர் எச்.வி.ஹாண்டே: அந்த அளவுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் முன் கூட்டியே எச்சரிக்கை கொடுக்கிறோம். அந்த மாதிரி வரக்கூடாது, வன்முறைக்குச் செல்லக்கூடாது என்றும் சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் நாம் அனைவரும் சேர்ந்து கோரஸ்ஸாகப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவர் சொன்னால் பிரயோசனம் இல்லை. எல்லோரும் சேர்ந்து வன்முறை தலை தூக்காது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தாக்கப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொடுக்கப்படுகிற புகார் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்லுவேன்.

11—1—1973 அன்று மதுரையில் சின்னாளப்பட்டியில் தி.மு.க. உறுப்பினர் ரமணி என்பவர் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரில் என்ன குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் ஏதோ விஷம் கொடுத்து அவர்களைக் கொன்று விட்டார்கள் என்பது போல் புகார் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதை விசாரித்த போலீசார் அந்த புகார் சரியானது அல்லது என்று சொல்லி இருக்கிறார்கள். ரமணி செத்தது உண்மை. கொல்லப்பட்டது உண்மை. கொலையுண்டது உண்மை. ஆனால் அ.தி.மு.க.வினரால் கொல்லப்பட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் புகார் உண்மை அல்ல . . .

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, அ.தி.மு.க. என்கிறார்களே, க.தி.மு.க. தலைவர் பேசுகிறார்களா ? சட்டமன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றிருக்கிறதே தவிர. அ.தி.மு.க. என்றில்லை. இவர் என்ன க.தி.மு.க. தலைவரா என்று கேட்கிறேன். வெளியில் வேண்டுமானால் பேசட்டும். இரவு 8-30

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் எங்களுடைய கட்சியை தி.மு.க. என்று சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்கு தி.மு.க. என்று சொல்லுகிறேன். அவர்களைச் சொல்லும்போது அ.தி.மு.க. என்கிறேன். எங்களுடைய கட்சியின் முழுப்பெயரை திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறுப்பிடும்போது, அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று முழுப்பெயரைச் சொல்லுகிறேன். அண்ணா என்ற பெயரைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம் ? அண்ணா அவர்களின் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டால் பரவாயில்லை. அண்ணா பெயரால் சாப்பிடக் கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : நிரம்ப சாப்பிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல் இதுபோன்ற வன்முறை செயல்கள் மூன்று ஆண்டு காலத்தில் இங்கே 21 அரசியல் கொலைகள்தான். கேரளத்தில் 53 அரசியல் கொலைகள் என்று நான் எடுத்துக்காட்டியதற்குக் காரணம். இந்த வன்முறைகள் எல்லா இடத்திலும்......

டாக்டர் எச். வி. ஹண்டே : நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி குறிப்பிட்டுக்கொண்டிருந்த நிகழ்ச்சியின் விவரத்தை சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விஷம் கொடுத்து கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்தது. புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீசார் புலன் விசாரித்து, புகார் சரியானதல்ல என்று கூறி, யார் யார் மீது புகார் கொடுக்கப்பட்டதோ, அ.தி.மு.க. கட்சியினர் மீது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். ரமணி செத்தது செத்தது தான். அவர் தி.மு.க. உறுப்பினர். ஆனாலும், தி.மு.க. உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதாகப் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அந்தப் புகாரை அப்படியே எடுத்துக் கொண்டு யாரையும் கைது செய்யவும் இல்லை, வழக்குப் போடவும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக கூற முற்பட்டேனே அல்லாமல் வேறு எதுவுமல்ல.

பொதுவாக, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களை, நமது திரு பொன்னப்ப நாடார் சொன்னாலும் சரி, மற்றவர்கள் சொன்னாலும் சரி, அனைத்தும் இன்றைக்கு இந்த அரசால் போலீசார் ஆட்டி வைக்கப்படுகிறார்கள், போலீசார் இந்த அரசால் தூண்டிவிடப்படுகிறார்கள் என்கின்ற இந்தக் கருத்தையே அவர்கள் எதிரொலித்தார்கள்.

காலையில் பேசிய என்னுடைய நண்பர் திரு. காளிமுத்து அவர்கள் கூட, எனக்கு, குருவிற்கு செலுத்த வேண்டிய வணக்கத்தை மரியாதையை எல்லாம் செலுத்திவிட்டு, நான் குருவை எதிர்க்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டேனே என்றெல்லாம் இங்கே பேசி, எதிர்ப்பதற்கான காரணம் ஜனநாயகத்திற்குப் புறம்பாக இந்த அரசு போய்க் கொண்டிருக்கிறது, ஆகவே தான் என்றெல்லாம் சொன்னார். 10 நாளைக்குள் அந்த மாற்றம் அவருக்கு ஏற்பட்டது. 10 நாளைக்கு முன்னால் கூட ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதிலே கூட அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் சொன்னார்...........

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காத என் தலைவர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம். என் வழிபாட்டுக்குரிய தங்களைப் பற்றி ஒலிக்கின்ற — எழுதி வைக்கப்படுகின்ற தகாத வார்த்தைகளை எல்லாம் கேட்டு மனம் தாளாமல் தான் நேற்றைய தினம் என் உள்ளம் உணர்ந்ததைத் தங்களிடம் கூறினேன். என் தலைவர் இடுகின்ற ஆணையை, ஐயத்துக்கோ, கேள்விக்கோ இடமின்றி ஏற்று வழி நடக்கக்கூடிய நான்— இருக்கின்ற நிலையைக் கூற வேண்டும் என்பதனாலேயே கூறினேன். அன்றாடம் ஆயிரம் வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் தங்களுக்கு நானும் துயரத்தைத் தந்துவிட்டேனா என்று வருந்துகிறேன். இந்த உலகில் எந்த அரசியல் கட்சியின் தொண்டனும் தனது தலைவரை இதுவரை நேசித்திருக்க முடியாத அளவுக்கு உயிரினும் மேலாகத் தங்களை நான் நேசிப்பவன் என்பதையும், எதிரியின் தலையில் கிரீடமாக ஜொலிப்பதைவிட தங்கள் காலடியின்கீழ் புல்லாக மிதி படுவதையே நான் விரும்புகிறேன்.

[1973 மார்ச் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

தங்கள் திருவுள்ளம் இதை அறியுமாதலால் என்னைத் தவருக நினைக்க மாட்டீர்கள் என்று ஆறுதல் அடைகிறேன். எதிர்ப்புகளுக்கு இடையிலேயே அரசியல் நடத்தி வெற்றி கண்ட தாங்கள் எடுத்த முடிவை ஏற்று, எதிர்ப்புக்கு இடையே இயக்கத்திற்கு வெற்றி உருவாக்க வேண்டும் என்ற உள்ள உறுதியோடு தங்கள் தாள் பணிந்து வணங்கி ஊருக்குத் திரும்புகிறேன். வருகிறேன். என்றும் தங்கள், க. காளிமுத்து ".

என்று கடிதம் எழுதினார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்களுக்கு கடிதம் எழுதுவதே தவறுபோல் தோன்றுகிறது.

Thiru R. Ponnppa Nadar: Is it not confidential?

திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதம், அ.தி.மு.க. உருவாக்கப்பட்டதற்கு முன்பு நான் எழுதிய கடிதம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தி.மு.க. விலிருந்து விலக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், வேறு எந்த இயக்கத்திற்காவாவது சென்று விடுவாரோ, அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பாகப் போய்விடுவாரோ என்று நான் கருதிய காரணத்தால் தான் அப்படிப்பட்ட கடிதம் எழுத நேரிட்டது. ஆனால், அண்ணாவின் கொள்கையினை ஏற்று அவ்வழி நடக்க புதிதாக ஒரு இயக்கம் உருவாக்கப்பட்ட பிறகு அந்தப் புனிதமான இயக்கத்தில் என்னுடைய குரு எனக்குக் கற்றுத்தந்த அரசியல் பயிற்சிப்படி நான் அதில் இணைந்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதோடு மாத்திரமல்ல, பிறகு 10 நாட்கள் கழித்து பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை; அதன் நகல் கைப்படவே எனக்கு வந்தது.

"என் உயிரினும் மேலாக நான் ஏற்றுக்கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நான் விலகி புதிய கட்சியில் இணையப் போவதாக வதந்திகள் உலவுவதை அறிகிறேன். தி.மு.கழகம் என் இதயத்துடிப்போடும், இரத்தச் சுழற்சியோடும் இணைந்துவிட்ட ஒன்றாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் என் வழிபாட்டிற்குரிய தானைத் தலைவராவார். இதனை விட்டுப் பிரிவது என்பது என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாகும். முன்னேற்றக் கழகத்தை காட்டிலும் இளைஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத்தக்க முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட ஒரு இயக்கம் தமிழகத்தில் கிடையாது. டாக்டர் கலைஞரைக் காட்டிலும் தமிழகத்தின் வழிகாட்டி வேறு எவரும் இடையாது. எனவே, தவருன வதந்திகளை நம்ப வேண்டாம் என்று இயக்கத் தோழர்களை வேண்டுகிறேன். இவண், கா. காளிமுத்து ".

இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பிறகு அவர் எழுதிய கடிதம்.

திரு கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, எந்தச் சூழ்நிலையில் கடிதம் எழுதப்பட்டது என்பது தங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தெந்தச் சூழ்நிலையில் என்னென்ன நடந்தது என்று எனக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும். ஏனென்றால் காலையில் போலீஸ் மானியத்தின்மீது பேசும்போது அதைப் பேசினார் என்பதற்காகச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த மானியத்தைப் பொறுத்த வரையில் நான் எடுத்துச் சொன்னேன். காவல் துறையில் உள்ளவர்களை எந்தெந்த அளவுக்கு..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காளிமுத்து எந்த சூழ்நிலையில் அவர் எழுதினார் என்பது எனக்குத் தெரியும் என்று என்னைச் சுட்டிக்காட்டினார். எனக்கு எதுவும் தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காவல் துறையிலே இருக்கிற நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உதவியினைச் செய்வதன் மூலமும், மேலும் அந்தத் துறை நல்ல முறையிலே இந்த நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவும் பல வசதிகளை இந்த அரசின் சார்பில் செய்து கொடுத்திருக்கிறோம். அவைகள் போதுமானவைகளல்ல. ஏனென்றால் அரசு அலுவலாளர்களில் மற்றவர்களைக் காட்டிலும் காவல் துறையில் இருக்கின்ற அதிகாரிகளானாலும், காவலர்களானாலும், அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களிலே தவறானவர்கள் இருக்கலாம். அவர்கள் இந்த மாமன்றத்தால் அல்லது மற்றவர்களால் அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டால், அரசால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்க மாட்டேன். அதே நேரத்திலே இந்தத் துறையை நல்ல அளவுக்கு விரிவுபடுத்தி, வலிவுள்ளதாக ஆக்க வண்டும் என்பதும் நம்முடைய பொறுப்பாகும். இன்றைக்கு நாட்டில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் அமைதியாக நடைபெற்றால் அதை ஆட்சேபிப்பதற்கு யாருமில்லை.

நமது திரு. பொன்னப்ப நாடார் கூடச் சொன்னார். எங்களுடைய 15-ம் தேதிப் போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது, என்று சொன்னார். எந்த ஊரிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை. அதைப் போலவே, அப்படி அமைதியாக நடைபெற்ற ஊர்வலங்களைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பையும், அவைகளை ஒழுங்காக வழி நடத்திச் சென்றவர்களுக்குத் துணையிருக்கக்கூடிய பொறுப்பையும் காவல் துறையினர் ஏற்றுக்கொண்டனர் என்பதை அவர்களும் மறுக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு காவல்துறை நல்ல பணியை ஆற்றியிருக்கிறது. சென்னையிலாகட்டும், மற்ற நகரங்களிலாகட்டும், அமைதியான ஊர்வலங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். ஏதோ 1, 2 ஊர்வலங்களில் சச்சரவுகள், கலவரங்கள் இந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படாமல் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள் அதைப் பாதுகாத்திட வேண்டும். அந்தந்த கட்சியின் தலைவர்கள், கட்சியின் தொண்டர்களுக்கு அறிவுரை கூறிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கட்சி, மதிப்பிற்குரிய காமராசர் கட்சி நடத்திய ஊர்வலம் அமைதியாக நடந்தது என்று

சொன்னால், அதுகூட பயமாக இருக்கிறது. ஒரு வேளை காமராசர் அவர்களுடைய கட்சியும், கழகமும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்துகொண்டிருக்கிறதோ என்றெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் இங்கே வேகமாகப் பேசியதற்கே கூட ஒரு காரணம் எங்கே இப்படி சந்தேகப்பட்டுவிடுவார்களோ என்பதுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அந்த மாதிரி ஒன்றுமில்லை. நான் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வன்மையாக கண்டித்தேனே ஒழிய அந்த மாதிரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம் அமைதியாகச் சென்றால் எந்த விதமான தொல்லையும் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால் 9-ம் தேதி நடந்த விவசாயிகள் ஊர்வலத்தில் மதிப்பிற்குரிய காமராசர் தலைமையில் நடத்திய ஊர்வலத்தில் நாங்கள் கூட இருந்தோம். ஊர்வலம் போகிற நேரத்தில் வழியில் பல இடங்களில் வழிமறித்து, பிளாசா தியேட்டருக்கு அப்புறம் சைக்கிள் டயரில் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி மெத்தை மேலிருந்து ஊர்வலத்தின் மேல் போட்டு சிதற வைத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆகஸ்ட் 15 சுதந்திரத் தினத்தன்று ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அண்ணா அவர்களும், நானும், நாவலரும், மதி உட்பட மற்ற அமைச்சர்களும் கவர்னர் வீட்டில் இருந்தோம். கவர்னர் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்; அதில் கலந்து கொள்வதற்காக அங்கே சென்றிருந்தோம். அன்றையதினம் இங்கே ஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் "தென்னகம்", 'முரசொலி', அலுவலகங்களிலே புகுந்து இரண்டு அலுவலகங்களையும் சூறையாடியது. அதற்கு யார் பொறுப்பு? ஊர்வலத்திலே போகிற யாரோ சிலபேர் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். ஆகவே நாம் இப்பொழுது எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்று சொல்கிறோமோ, அதே அளவுக்குத் தொண்டர்களைத் தனித்தனியாக நாம் பயிற்றுவிக்க வேண்டிய கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாக் கட்சியிலும் சிலர் இருப்பார்கள். தி. மு. கழகத்தில் உள்ள அத்தனை பேருமே அமைதியானவர்கள், யாரிடத்திலும் முரட்டுத்தனம் கிடையாது என்று நான் சொல்ல மாட்டேன். ஆத்திரத்துதிற்கு சில நேரங்களிலே அவசரமாக ஆட்பட்டுவிடுகிறவர்கள் கொஞ்சநஞ்சம் எல்லாக் கட்சியிலும் இருப்பார்கள்.

பொதுக்கூட்டங்களிலே பேசப்படுகின்ற பேச்சைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். காலையிலே என்னைப்பற்றி அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் இங்கே என்ன பேசினார்? திருப்பி நான் அந்த வார்த்தையை சொல்லக் கூடாது. இங்கேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இவ்வளவு பேருக்கு நேராக இப்படிப் பேசுகிறார் என்றால் மேடையிலே என்ன பேசுவார்கள்? எந்தெந்த அளவுக்கு அமைச்சர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் தாக்கப்பட்டாலும் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் தரம் குறையாத அளவுக்கு மேடை அரசியலை நடத்த நாம் பழகிக் கொண்டால் ஆத்திரம் நிச்சம் தணியும்.

கறுப்புக்கொடி பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, பட்டுக்கோட்டை நிகழ்ச்சி பற்றி சொன்னார்கள். பட்டுக்கோட்டை நிகழ்ச்சிக்காக 2 மணிக்கெல்லாம் ஒரத்தநாடு நிகழ்ச்சியை முடித்துவிட்டு, உடனே பட்டுக்கோட்டைக்கு போய்விடலாம் என்று நான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் வந்து கறுப்புக்கொடி காட்டுபவர்களைச் சந்தித்துப் பேசினேன் ; 3 மணியிலிருந்து 4 மணி வரை அங்கே காத்திருப்போம் ; நீங்கள் அந்த இடைநேரத்தில் வரவேண்டும்'' என்று சொன்னார்கள். அதற்காகவே நான் ஒரு மணி நேரம் ஒரத்தநாட்டிலே உட்கார்ந்து அவர்களுக்காக நான் நேரம் கொடுத்து 3 மணியிலிருந்து 4 மணிக்குள் செல்வதற்காகத் தயார் படுத்திக்கொண்டு 3 மணிக்குக் காரில் ஏறி உட்காருகிறேன்.

"கறுப்புக்கொடி பிடித்தவர்கள் அங்கிருந்து வந்து குறுக்கே நிற்கிறார்கள். ஆகவே அசம்பாவிதம் ஏற்படும்'' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் தடுக்கப்பட வேண்டும். கறுப்புக்கொடி காட்டட்டும். அது ஜனநாயக ரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் அதிலே பலாத்காரம், கல் எறிதல், கலகம் விளைவித்தல் என்றிருக்கக் கூடாது. மதி அவர்கள் கூடச் சொன்னார்கள் ; மண்ணையின் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தத்தோடு சொன்னார்கள். இதெல்லாம் விளையாட்டுச் செய்திகளா ?

அமைச்சர்கள் கலந்துகொண்ட பல கூட்டங்கள் கல்லெறிக்கு ஆளாகின்றன. நண்பர் வேழவேந்தன் அவர்களின் கார் தீ வைத்து அடியோடு கொளுத்தப்பட்டது. அந்தக் கார் எதற்கும் பயனில்லை என்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எந்தத் தரப்பிலும் இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கப் படுவது ஒவ்வொரு அரசியல்வாதிகளின் கடமை. ஆகவே, போலீசார் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வேன் வன்முறையிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது போலீசார் தயவுதாட்சணியமின்றி நடவடிக்கை எடுப்பார்கள், எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தான் இந்த மாமன்றத்தின் மூலம் பிரதிபலிக்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. இரவெல்லாம் கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று திரு. நாடார் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி ஏற்கெனவே ஐ.ஜி. அவர்கள் மூலம் அறிக்கை அனுப்பப் பட்டிருக்கிறது. சென்னை நகரில் இரவு 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்றும், திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களில் 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டுமென்றும், மற்ற வெளியூர்களில் இரவு 11 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்று ஆணைபிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை யார் மீறினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதை ஒழுங்குபடுத்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன் ; சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன் ; அதைப்போன்றே கூட்டங்களை நடத்துகின்ற எல்லாக் கட்சித் தொண்டர்களும், ஒலி பெருக்கி அமைப்பாளர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். 11 மணி முதல் 12 மணி வரை கூட்டங்கள் நடந்தால், முடியும் வரை எந்தக் கூட்டமானாலும் காவலர் நின்று தங்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

1973 மார்ச் 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்போது லைசென்ஸ் கொடுப்ப திலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா ? யார் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எல்லாத் தரப்பிலும் இருக்கக்கூடிய வர்கள் இந்த விதிமுறைகளைக் கடைபிடித்தால், எல்லா அரசியல்வாதி களின் உடம்புக்கும் நல்லது; எல்லாவற்றுக்கும் நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் என்ற முறையில் திரு. ஹாண்டே அவர்களின் அறிவுரைக்கு நன்றி.

சேலம், வேலூரில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிச் சொன்னார்கள். அதில் வலது கம்யூனிஸ்டுகள் அதிகம் கலந்திருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். அப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் கல்யாண சுந்தரம் அவர்கள் பத்திரிகையிலே அறிக்கை விட்டார்கள். அந்த அறிக்கையில் சேலம் வேலூரில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது என்று குறிப்பிட்டிருக்கிறார். "சேலம், வேலூரில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு வலது கம்யூனிஸ்டுகள் காரணமென்று முதலமைச்சர் கூறியிருப்பது கற்பனையே என்றும், வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக தங்கள் கட்சிக் கிளை இல்லை என்றும் தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி தலைவர் கல்யாணசுந்தரம் இன்று இங்கு கூறினார்" என்ற செய்தி 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் "தினமலர்" பத்திரிகையில் வெளிவந் திருக்கிறது. உண்மையிலேயே அந்த அப்படி இருக்குமோ என்று நான் விசாரித்தேன்.

அவர் சொல்கிறார், 15 ஆண்டுகளாக கம்யூனிஸ்டு கட்சியின் கிளையே அங்கு கிடையாது என்று. உண்மையில் அப்படி இருக்குமா என்று விசாரித்தோம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் நாளில் ஒரு துண்டு அறிக்கை வெளியிட் டிருக்கிறது. அதில் "வேலூர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை" என்று தலைப்பிட்டு, "வேலூர் பெரியோர்களே! தாய்மார்களே! என்று அழைத்து வெளி யிடப்பட்ட துண்டறிக்கை.

அது மாத்திரமல்ல. சுதந்திர தின வெள்ளிவிழாவையொட்டி ஒரு சர்வகட்சிக் கூட்டமும் விவசாயப் போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறை சென்று மீண்ட வீரர்களுக்குப் பாராட்டு விழாவும், இதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்துகொள்கிறார்கள்....இப்படிக்கு ஸ்தாபன காங்கிரஸ் இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி-வேலூர் என்று நோட்டீஸ் அச்சடித்திருக்குகிறார்கள்.

ஆனால் கல்யாணசுந்தரம் சொல்கிறார், 15 ஆண்டுகளாக அந்தப்பகுதியில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது, கருணாநிதி தவறாகச் சொல்கிறார் என்று. இப்படித்தான் பல விஷயங்கள் அறிக்கை விடுகின்ற காரணத்தால் அவை களை பத்திரிகைகளில் பெரிதுபடுத்திப் போட்டு, தி.மு.க. கழக அரசுக்கு ஏதாவது குந்தகம் வராதா என்று எதிர் பார்க்கின்ற காரணத்தால்தான் உண்மைக்கு மாறான செய்திகள் நாட்டில் நடமாடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதியழகன் அவர்கள் தன் பேச்சை முடிக்கிறநேரத்திலே சொன்னார், "மக்கள் கிளர்ந்தெழுவார்கள், கவர்னரை வாபஸ் பெறவேண்டும், மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்" என்று சொன்னார்கள். மதி அவர்களின் வாயிலிருந்து எக்காள முழக்கங்களையெல்லாம் கேட்டிருக்கிறேன். எங்களை விட அதிகமாக மத்திய அரசை எதிர்த்து எக்காளமிடுபவர் மதி அவர்கள். இன்றைக்கும் மத்திய சர்க்காரை எதிர்க்கின்ற பாவனையிலேயே மாநில அரசை அழித்துவிடு, மாநில அரசுக்கு புத்தி சொல் என்கின்ற எக்காள முழக்கத்தைக் கேட்டேன். அவர் எங்களைவிட மத்திய அரசை வேகமாக எதிர்த்துப் பழக்கப்பட்டவர். இன்றைக்கு "மத்திய அரசே உடனடியாகவா, கவர்னரை வாபஸ் வாங்கு, இல்லாவிட்டால் மக்கள் இந்த அரசைத்தூக்கி எறிந்துவிடுவார்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். தூக்கி எறிந்திட திராவிட முன்னேற்றக் கழக அரசு பூப்பந்து அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். (பலத்த கைத்தட்டல்). திராவிட முன்னேற்றக் கழக அரசு இமாலயம். இதை யாரும் அசைத்திட முடியாது என்று கூறி இந்த அளவிலே விடைபெறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, இந்த அளவிலே அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதிக் கோரிக்கையின்மீது விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வெட்டுத் தீர்மானங்கள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

DR. H. V. HANDE: Sir, I am pressing my cut motion, namely, 'to discuss the need for the issue of instuctions to all the police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to the police stations'.

The cut motion was put and lost.

திரு. கே. எ. வகாப்: திரு. க. சுப்பு திருமதி த. ந. அனந்த நாயகி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: திரு. கே. எம். சுப்ரமணியம் ஆகியோர் தங்களுடைய இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாடு எங்கும் மாணவர்கள் மீது சொல்லப்பட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெறப்படுவதுபற்றி முதல்மைச்சரவர்கள் கருத்து ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை பிரஸ் பண்ணுகிறேன்.